**மட்டக்களப்பு மாநகர சபை - 2020**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளளவாறு மட்டக்களப்பு மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

------------------------------------------------------------------------------------------------------------------------------ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருந்தது.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய வருடத்திலே என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (i) | காணி கட்டிடம் தவிர்ந்த ரூபா 267,903,824 கிரயமான ஏனைய சொத்துக்களில் நிறுவனம் நாளாந்தம் பயன்படுத்துகின்ற போதிலும், அவற்றிற்கான பெறுமான தேய்வு மற்றும் திரண்ட பெறுமான தேய்வு ஏற்பாடு என்பன நிதிக்கூற்றுக்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து பெறுமான தேய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | இயந்திரங்கள், வாகனங்கள், தளபாடங்களும் உபகரணங்கள் மற்றும் நூலக புத்தகங்கள் என்பவற்றின் திரண்ட கிரயப்பெறுமதியாக ரூபா 267,903,824 தொகை காட்டப்பட்ட போதிலும், அவற்றிலிருந்து ஏல விற்பனை மூலம் அகற்றல் செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயப்பெறுமதி அகற்றப்பட்டிருக்கவில்லை. | தற்போது அனைத்து உருப்படிகளினதும் பெறுமதியை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2004 ஆம் ஆண்டு சுனாமியினால் இழக்கப்பட்ட ரூபா 1,475,000 | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான புத்தகங்களின் கிரயம்ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கான உரிய அனுமதியின்றி மீளாய்வாண்டிற்கான கணக்கறிக்கையிலிருந்து பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது. | எழாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதிகள் அகற்றுவதற்கு முறையான அனுமதி பெறப்படல் வேண்டும். |
| (iv) | சபை அதிகார எல்லையினுள் 2018, 2019 மற்றும் மீளாய்வாண்டுகளில் கைமாற்றப்பட்ட சீதனம் மற்றும் நன்கொடைகள் மூலம் உரிமை மாற்றம் செய்யப்படும் அசைவற்ற சொத்துக்களுக்காக அறவிடப்பட்ட முத்திரை தீர்வை ரூபா 61,692,603 தொகையில், கிழக்கு மாகாண திறைசேரிக்கு கொடுத்து தீர்க்க வேண்டிய 1% தொகை ரூபா 616,926 மற்றும் மாவட்ட காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 170,900 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இம்முறை தங்களின் அறிவுறுத்தலின்படி அனைத்தையும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (v) | பொது களஞ்சிய பொருட் கணக்கில் ரூபா 13,000,000 வாக செலவுப் பதிவு செய்யப்படடிருந்த போதிலும் திரண்ட நிதிக் கணக்கில் ரூபா 14,428,072 தொகை என காட்டப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (vi) | சபையின் கடன்கொடுத்தோர் மீதியானது வருட ஆரம்பத்தில் ரூபா 89,370,199 என காட்டப்பட்டிருந்த போதிலும், வருட இறுதியில் பூச்சிய மீதியையே நிதிக்கூற்றில் வெளிப்படுத்தியிருந்தது. எனினும், மீளாய்வாண்டு இறுதியின் போது தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதியானது ரூபா 25,986,899ஆக இருந்தது. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாது. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (vii) | மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் மாநகர சபைக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவுத் தொகையாக ரூபா 12,534,735 வழங்கப்பட்டிருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதியீட்ட நடவடிக்கையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாது. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (viii) | மூலதன செலவீட்டிற்கான அரசினால் வழங்கிய பங்களிப்புத் தொகை நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கவில்லை. | எதிர்காலத்தில் இவற்றையும் கணக்கிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ix) | 2019 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய ரூபா 33,410,387 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாது. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (x) | 2003 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா 6,860,650 பெறுமதியான தண்ணீர் பவுசர் இயந்திரம் மற்றும் நாலு சில்லு உழவு இயந்திரம் என்பவற்றின் பெறுமதி ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக சொத்தாகக் காட்டப்பட்டுவருகின்றது. | இவ்வருடம் தங்களது அறிவுறுத்தலைப் பெற்று இது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (xi) | முன்னைய வருடத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புக்கள் ரூபா 31,514,139 நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருடம் இது நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படுவதுடன் பகுதி பகுதியாக தீர்ப்பனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (xii) | 2020 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருக்கும் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மட்டக்களப்பு மாநகர சபையினால் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்கான கிடைக்கப்பெற வேண்டிய நிலுவையான பெறுவனவுகள் ரூபா 5,615,613 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாது. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (xiii) | மீளாய்வாண்டின் சுற்றுலா விடுதிகளின் வருமானத்தின் மீதான பெறவேண்டிய தீர்வை ரூபா 4409,641 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றில் சொத்தாகக் காட்டப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 117,648,379 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 77,381,609 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கோட்டைமுனை சந்தையில் பகுதியில் ரூபா 1,778,000 செலவில் நிர்மாணிக்கப்படடிருந்த உயிர் வாயு செயற்றிட்டமானது, 2018 செப்ரம்பரில் நிர்மாணிக்கப்படடிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்க்ப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் மூலம் வருமானத்தினை உழைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான காலப்பகுதியில் சுற்றுலா துறை சார்ந்த ஹோட்டல், உணவகம் மற்றும் தங்குமிட விடுதிகளின் மொத்த வருமானப் புரள்வில் 01% சதவீதத்திற்கு மேற்படாத தீர்வைகள் ரூபா 2,986,815 தொகை சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட பல கடிதங்கள் அனுப்பியும் அவர்களால் செலுத்தப்படவில்லை. | நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |